# மதுகம பிரதேச சபை
# கழுத்துறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் 2011 மே 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 யூன் 09 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதுகம பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி முன்கொண்டுவரப்பட்ட போது மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு மற்றும் திரண்ட நிதியக் கணக்கின் மீதிகள் முறையே ரூபா 35,180 தொகை குறைவாகவும் ரூபா 35,000 தொகை அதிகரித்தும் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பிரகாரம் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்காத இயந்திரங்களும் உபகரணங்களினதும் பெறுமதியான ரூபா 22,340 தொகையில் ரூபா 9,750 தொகை மாத்திரம் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தமையினால்

மேலும் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்காத பெறுமதி ரூபா 12,590 ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த நூலகப் புத்தகங்களின் பெறுமதியாக ரூபா 707,617 தொகை நூலகப் புத்தகக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நூலகப் புத்தகங்களைப் பதிவழித்தல்கள் ரூபா 270 தொகையும் அக்கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் பேரேட்டில் காணப்படுகின்ற ரூபா 28,910,570 தொகையான நிலுவையாக இருந்த ஏனைய வருமான மீதியானது ஐந்தொகையில் ரூபா 28,914,610 எனக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த கடை வாடகைக் கணக்கின் மீதி ரூபா 2,778,239 தொகையாகக் காண்பிக்கப்பட்டதன் பின்னர் கணக்கு ரூபா 4,036,184 இற்கு சமப்படுத்தப்பட்டிருந்த போதிலும் வரவு மற்றும் செலவுப் பக்கங்களின் கூட்டுத்தொகை முறையே ரூபா 6,385,008 மற்றும் ரூபா 3,178,297 தொகைகளானமையினால் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதன் படி மீதி ரூபா 3,206,711 ஆக இருந்தது.

(ஊ) நிலுவையாக இருந்த கடைவாடகைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 199,181 மீதியை இனங்காண முடியாதிருந்ததுடன் அம்மீதிகளே திரண்ட நிதியக் கணக்கில் வரவிலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(எ) நாட்குறிப்புப் பதிவுகளின்றி வியாபார அனுமதிப்பத்திரக் கணக்கிற்கு ரூபா 23,900 தொகை வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 994,627 தொகையான செலுத்தப்படாத சம்பளம் மற்றும் வேதனங்கள் கணக்கின் மீதி ஐந்தொகையில் ரூபா 922,872 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பதவியினர் கடன் ரூபா 9,196,055 ஆன மீதி ஐந்தொகையில் ரூபா 9,687,386 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 20,369,580 தொகையான நிலையான வைப்பு மீதி ரூபா 19,651,578 தொகையாக வங்கி மீதி உறுதிப்படுத்தல்களில் காணப்பட்டது.

(ஓ) மீளாய்வாண்டின் போது கிடைத்த கிடைக்க வேண்டியிருந்த சேவைக் கட்டணம் ரூபா 72,600 தொகை கட்டிட வாடகைக் கணக்கிற்கு செலவில் வைத்தமையை சரிசெய்வதற்காக கட்டிட வாடகைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு நிலுவையாக இருந்த வருமானக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கில் செலவில் பதியப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் இறுதியில் இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் எஞ்சியிருந்த 35 தார் பெரல்களின் பெறுமதியான ரூபா 589,365 தொகை இறுதியிருப்பிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(க) 2009 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நடைமுறைக் கணக்கில் செலவில் பதியப்பட்டிருந்த ரூபா 520,990 தொகை வருமானம் மற்றும் நிலையான கட்டளையின் அடிப்படையில் செய்யப்பட்ட ரூபா 75,248 தொகையான கொடுப்பனவுகளைச் செலுத்துதல் என்பன கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) செலவினப் பொழிப்பின் பிரகாரம் 03 நிகழ்ச்சித்திட்டங்களின் மூலதனச் சொத்துக்களை பழுதுபார்ப்பதற்காக 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சென்மதியாக இருந்த ரூபா 2,133,282 செலவினம், கடன்கொடுத்தோர் கணக்கில் ரூபா 3,143,282 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையினால் ரூபா 1,010,000 இனால் கடன்கொடுத்தோர் மீதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(கி) செலவினப் பொழிப்பின் பிரகாரம் மூலதனச் செலவினம் ரூபா 41,096,572 தொகை வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 41,788,000 எனக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(கீ) மீளாய்வாண்டின் இறுதியில் 5 கணக்கு விடயங்களின் அட்டுறு செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,890,724 தொகையாக இருந்த போதிலும் அதற்குரிய கடன்கொடுத்தோர் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்த செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,203,749 ஆக இருந்தது.

(கு) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த தளபாடங்களும் உபகரணங்களினதும் பெறுமதி ரூபா 188,148 தொகை நாட்குறிப்புப் பதிவுகள் இன்றி மூலதனமாக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 6 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,214,215 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,913,966 ஆகும்.

(ஆ) பொழிப்பு வருமானப் பதிவேட்டின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டம் 01 இல் ஏனைய வருமானம் ரூபா 1,246,840 தொகையானது வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 1,379,060 எனக் கொண்டுவரப்பட்டமையினால் ரூபா 132,220 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கணக்கேடுகள் பராமரிக்கப்படுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முற்பணப் பதிவேட்டில் முற்பணம் செலுத்தப்பட்ட நபர்களின் பெயர் குறிப்பிடப்பட்டிராததுடன் காரணம் மற்றும் தொகை மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) பிரதான பேரேட்டில் கணக்குகள் கவனத்திற்கு எடுக்கப்படாமல் கூட்டப்பட்டிருந்தமையினால் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகைகள் சரியற்றிருந்ததுடன் கணக்குகளில் சில பதிவுகள் டிபெக்ஸினால் அழிக்கப்பட்டு திரும்ப எழுதப்பட்டிருந்தன.

(இ) நாட்குறிப்புப் பதிவுகளின் மீதிகள் மற்றும் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்த மீதிகளுக்கிடையே இணக்கமின்மைகளும், கணக்குகளை சீராக்கிய போது நாட்குறிப்புக்களின்றி கணக்குகளில் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 ஒக்தோபர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்பான ரூபா 6,922,295 தொகையானது 2010 திசெம்பர் 02 வரையிலும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கணக்காய்விற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 212,315,896 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியாதுள்ளது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாண அறிவுறுத்தல்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | ஒரு வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த வழங்கப்பட்டும் கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதத்தினை விஞ்சிய ரூபா 202,244 கூட்டுத் தொகையான 06 காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 மற்றும் | 1986 தொடக்கம் 2006 வரையான |

| | |
|---|---|
| 572 | காலப்பகுதியினுள் பொது வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்த ரூபா 3,487,420 தொகையான வைப்புக்கள் தொடர்பாக தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி | |
| விதி இல. 140 | 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 திசெம்பர் வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 6,841,590 தொகையான முற்பணம் தொடர்பாக தொடர்புடைய விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 11,872,407 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,233,020 ஆக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்ப்பித்திருந்த மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றி தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பீடு | உள்ள வாறானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | மதிப்பீடு | உள்ள வாறானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா '000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா '000 |
| (i) | வீத வரி மற்றும் வரி | 4,518 | 2,251 | 7,435 | 6,163 | 2,697 | 9,243 |
| (ii) | வாடகை | 428 | 1,869 | 3,960 | 5,433 | 3,703 | 4,074 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 225 | 176 | 211 | 267 | 180 | 187 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 18,553 | 5,454 | 22,196 | - | - | - |

### 2.3.2. வருமானத்தை அறவீடு செய்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வருமான மீதி ரூபா 28,910,570 ஆக இருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான மாட்டிறைச்சிக்கடை 2009 ஆம் ஆண்டின் போது கேள்வி நடைமுறைகளின் படி வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் வாடகையாளருடன் ஒப்பந்தமொன்றில் உடன்பட்டிருக்கவில்லை. ரூபா 288,832 தொகையான பாதுகாப்புப் பிணைப்பணமும் வைப்பிலிடப்பட்டிராமையினால் 2009 நவம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை வாடகை ரூபா 100,000 தொகையினை அறவீடு செய்யமுடியாதிருந்தது. இவ்வாறு இருந்த வேளை 2010 ஆம் ஆண்டின் போதும் மேற்கூறப்பட்ட வாடகையாளருக்கே அக்கடை திரும்ப கேள்வி நடைமுறைகளின் படி வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் ஒரு மாதத்திற்கான பாதுகாப்பு பிணைப் பணமான ரூபா 96,277 தொகையும்

கணக்காய்வுத் திகதியான 2010 நவம்பர் வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) பல வருட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட களியாட்டவரி ரூபா 14,404 தொகையும், 62 சந்தைக் கடைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,206,567 தொகையும், காரியாலயமொன்றை நடாத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த கட்டிடமொன்றிலிருந்து அறவிடவேண்டிய வாடகை ரூபா 86,000 தொகையும் தனியார் நிறுவனமொன்றின் கழிவுகளை அகற்றியதற்காக அறவிட வேண்டியிருந்த ரூபா 33,550 தொகையும் சபைக்குச் சொந்தமான படகை வாடகைக்கு விட்டு 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது அறவிட வேண்டியிருந்த ரூபா 27,000 தொகையும் ஆன நிலுவை மீதிகளை 2010 நவம்பர் வரையிலும் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி விற்பனையின் போது புரள்வின் அடிப்படையில் அறவிடவேண்டியிருந்த நூற்றுக்கு 1 ஆன வரியானது மதிப்பீட்டு விற்பனை அடிப்படையில் அறவிடப்பட்டிருந்தது. இதன் மூலம் 2004, 2005, 2006 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,938,229 கூட்டுத்தொகையான வரி வருமானமொன்று சபையினால் அறவீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு | உள்ளவாறானது | முரண் | பாதீடு | உள்ளவாறானது | முரண் |
| மீண்டுவரும் செலவுகள் | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ |
| ஆளுக்குரிய வேதனம் | 39,829 | 36,379 | 3,450 | 37,437 | 32,989 | 4,448 |
| ஏனையவை | 21,102 | 32,476 | (11,374) | 19,555 | 26,920 | (7,365) |
| உப கூட்டுத் தொகை | 60,931 | 68,855 | (7,924) | 56,992 | 59,909 | (2,917) |
| மூலதன செலவுகள் | 2,150 | 42,463 | (40,313) | 4,025 | 14,841 | (10,816) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 63,081 | 111,318 | (48,237) | 61,017 | 74,750 | (13,733) |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,687,386 ஆகும்.

### 2.5.2 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 203 மற்றும் 218 ஆம் விதிகளின் பிரகாரம் சபையின் சொத்துக்கள் தொடர்பாக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.5.3 செயற்பாடற்ற கணக்குகள்

வெலிப்பென்ன மற்றும் ஹொரவல உபகாரியாலயங்கள் 02 இல் சேகரித்தல் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டிருந்த பணம் பிரதான கணக்கிற்கு அனுப்பிவைக்கப்பட்டிராமையினால் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,283,882 தொகையான பணமீதியொன்று செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.5.4 பொருட் பதிவேடுகள் கட்டுப்பாடு

(i) 2008 பெப்ரவரி 28 ஆந் திகதி இடர் முகாமைத்துவ அமைச்சினால் 17 விடயங்களின் கீழ கிடைத்திருந்த 267 பொருள் அலகுகள் தொடர்பான விநியோகித்தல்கள் குறிப்பிடப்பட்டிராததுடன் 2010 நவம்பர் 30 ஆந் திகதியில் 03 விடங்களின் கீழ் 11 அலகுகள் குறைவு அவதானிக்கப்பட்டது.

(ii) அப் பொருட்களில் உள்ளடக்கப்பட்டிருந்த 08 வாயு அடுப்புக்கள் எவ்வித பயன்பாடுமின்றி களஞ்சியத்தில் காணப்பட்டது.

(iii) 2010 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மற்றும் இடர் முகாமைத்துவ நிலையத்தினால் கிடைத்திருந்த நீர் தாங்கிகளில் 1000 லீற்றர் தாங்கியொன்றும் 500 லீற்றர் தாங்கிகள் 03 உம் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.6 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமின்றியும் கேள்வி நடைமுறைகளின்றியும் வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றமைக்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 98,340 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1995 ஆம் ஆண்டின் பின்னர் சபையினால் கையேற்கப்பட்டிருந்த வீதிகள் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கிற்குரிய 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் விநியோகிக்கப்பட்டிருந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாததாகக் குறிப்பிடப்பட்ட 2008 திசெம்பர் 10 மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய நவுத்துடுவ விவசாயச் சங்கத்திற்கு எழுதப்பட்டிருந்த ரூபா 16,887 கூட்டுத்தொகையான 02 காசோலைகள் உரிய விவசாயச் சங்கத்திற்கு கையளிக்கப்படாமல் கணக்காய்வுத் திகதியான 2011 யூன் மாதம் வரையிலும் விடயப்பொறுப்பு எழுது விளைஞரின் பொறுப்பில் காணப்பட்டது.

(இ) மாதாந்த முன் நிகழ்ச்சித் திட்டங்கள் அந்ததந்த மாதங்கள் தொடங்குவதற்கு முன்னர் முதல் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் 03 உத்தியோகத்தர்களினால் கடமைகளைச் செய்கின்ற போது முன்நிகழ்ச்சித் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் மேலும் 04 உத்தியோகத்தர்களினால் கடமைகளைச் செய்கின்ற போது முன்நிகழ்ச்சித்திட்டங்களில் வேறுபாடுகளுக்காக திருத்தப்பட்ட முன்நிகழ்ச்சித் திட்டங்களும், அமுல்ப்படுத்தப்பட்டிருந்த வேலைகளின் பிரகாரம் செய்யப்பட்ட வேலை அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 244,822 தொகையான நிலையான சொத்துக்கள், நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 ஒப்பந்தக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) கட்டிப்பால் விற்பனை நிலைய நிர்மாணம்**

(i) 2009 ஆம் ஆண்டின் போது சபை நிதியத்தை ஈடுபடுத்தி ரூபா 139,570 தொகை செலவினத்தில் கட்டிப்பால் விற்பனை நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2010 நவம்பர் வரையில் பால் நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் மேல்மாகாண கால்நடை உற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் உபகரணங்களின் உரிமை அவர்களுக்கு உரித்தாகும் பிரகாரம் ரூபா 173,800 பெறுமதியான உபகரணங்கள் 2010 பெப்ரவரி மாதத்தின் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்திற்குரிய மதிப்பீட்டின் செயற்பாட்டு இல. 15 இன் கீழ் காட்டப்பட்டிருந்த சுவர்களுக்கு உள்ளும் புறமும் நிறப்பூச்சுக்கள் பூசுவதற்காக ரூபா 3,219 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடு அமுல்படுத்தப்படாதிருந்தமை 2010 நவம்பர் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**(ஆ) பாலிகா வீதி முதலாவது உப வீதிக்கு கொங்ரீட் இடுதல். (நீளம் 400 அடி)**

(i) ரூபா 280,794 தொகை செலவில் 2009 ஆம் ஆண்டின் போது நேர்க்கூலி அடிப்படையின் கீழ் கொங்ரீட் இடப்பட்டிருந்த வீதியின் ஆரம்பம் தொடக்கம் 32 அடி 08 அங்குலத்திற்கு முன்னால் வலது பக்கத்தில் 04 அடி 07 அங்குல நீளத்திலும் 01 அடி 09 அங்குல அகலத்திலும் பெரியளவிலான குழியொன்று காணப்பட்டமை 2010 நவம்பர் 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) வீதியின் ஆரம்பப் பகுதி வலைக் கட்டுக்களுடன் வலது பக்கத்திற்கு சரிந்த வடிவத்தில் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்விஷேட தன்மைக்கு ஈடுகொடுக்கக்கூடிய பிரகாரம் நீர் வடிந்து செல்லும் முறைமையொன்று அமைக்கப்பட்டிருக்காமல் வீதி மாத்திரம் திட்டமிடப்பட்டு கொங்ரீட் இடப்பட்டிருந்தமையினால் வீதியின் நீடித்த தன்மை தொடர்பாக நிச்சயமற்ற நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது.

**(இ) பாலிகா வீதி முதலாவது உப வீதிக்கு கொங்ரீட் இடுதல். (நீளம் 175 அடி)**

(i) ரூபா 151,267 தொகை செலவில் 2010 ஆம் ஆண்டின் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் வீதியின் கொங்ரீட் தடிப்பு 4" ஆக இருக்க வேண்டிய போதிலும் வீதியின் இறுதியிலிருந்து 05 அடிக்கு முன்னால் இருபக்கத்திலும் கொங்ரீட் தடிப்பு வலது பக்கத்தில் 1.8 அங்குலமாகவும், இடது பக்கத்தில் 1.5 அங்குலமாகவும் இறுதியிலிருந்து 40 அடி முன்னால் வலது பக்கத்தில் தடிப்பு 1.5 அங்குலமாகவும் மாத்திரம் காணப்பட்டது.

(ii) வீதியின் ஆரம்பம் தொடக்கம் 14 அடிக்கு முன்னால் இடது பக்கத்தில் நீளம் 03 அடி இல் 06 அங்குலம் மற்றும் அகல அடி 01 இல் 04 அங்குல கொங்ரீட் தட்டுகள் வெடித்துக் காணப்பட்டமையும் 2010 நவம்பர் 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) வீதியின் இருபக்க நெடுகிலும் பக்கப் பலகைகள் அடிக்கப்பட்டமைக்காக ரூபா 4,255 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் முழு வீதிக்கும் பக்கப் பலகைகள் அடிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் 5 ஆம் விதியின் 7 ஆவது உப விதி மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் 2008 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய WP/LPD/10/2008 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் அறிவுரைகளின்

பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றினை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்